மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மேலத்தொட்டியப்பட்டி என்ற கிராமம் பிள்ளையார் நத்தம் என்ற வருவாய் கிராமத்திற்கு உட்பட்ட ஒரு சிற்றூராகும். ஆகவே மேலத்தொட்டியப்பட்டி கிராமத்திற்காக, இந்த பிள்ளையார் நத்தம் என்ற கிராமத்தில் எல்லா வசதிகளும் செய்யப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்ட கூட்டுறவு விவசாயக் கடன் சங்க ஊழியர் மாநாடு.

*வினா எண். 341.—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டக் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்களின் ஊழியர்கள் மாநாடு 1978 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16 ம் நாளில் தஞ்சையில் நடந்தது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அவர்கள் கோரிக்கை அரசுக்கு வந்ததா, அவைகள் என்ன?

(இ) அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:

அறிக்கை *அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் அளித்திருக்கக்கூடிய மகஜர் மிகவும் முக்கியமானது. அவர்கள் ஏற்கனவே கூட்டுறவுச் சங்கங்களில் இரண்டு ஆண்டுகள், மூன்று ஆண்டுகள் பணியாற்றியவர்களாக இருக்கின்றபோது அவர்கள் அப்படி பணியாற்றிய காலத்தையே பயிற்சி காலமாக பாவித்து அவர்கள் மேலும் பயிற்சி பெற வேண்டியதில்லை என்கிற உத்தரவை வெளியிட அரசு பரிசீலனை செய்து ஆவன செய்யுமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மேலான யோசனையை அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*386–390ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

1979 மார்ச் 12]

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கூட்டுறவுச் சங்கத்தில் பணியாற்றக்கூடிய ஊழியர்கள், அரசாங்கத்தினுடைய ஊழியர்கள் போலல்லாமல் கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளுக்கேற்ப ஊதியம் பெறுகிறார்கள். அவர்கள் மிகக்குறைந்த சம்பளம் அதாவது 120 ரூபாய், 40 ரூபாய், 60 ரூபாய் என்ற அளவில் சம்பளம் வாங்குகிறார்கள். இப்படி எல்லாம் இல்லாமல் அரசே அவைகளை நேரடியாக ஏற்றுக்கொண்டு அந்த கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கும் அரசின் சட்டரீதியான ஊதியத்தை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக்கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கோ. இளங்கோவன் : இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் செயலாளர்கள் எந்த அடிப்படையில் வங்கி ஊழியர்களாக மாற்றப்படுகிறார்கள்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : ஆங்காங்கிருக்கிற கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் அவர்களை நியமித்துக் கொள்கிறார்கள்.

திரு. அ. செல்லப்பா : கிராம விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களில் ஐந்தாண்டுகள் பயிற்சி பெற்று வேலைக்கிருப்பவர்கள் நிரந்தரமாக்கப்படுவதில்லை. ஆகவே பயிற்சி காலத்தை முடித்துவிட்டு மீண்டும் விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றினால் அவர்களை நிரந்தரமாக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட யோசனை அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. சி. கோவிந்தராசன் : இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் வேலை செய்யக்கூடிய செயலாளர்கள், எழுத்தர்கள் போன்றவர்களுக்கு அந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் எந்தளவிற்கு வருமானம் வருகிறதோ அல்லது எந்தளவிற்கு டிரான்ஸாக்ஷன் இருக்கிறதோ அந்த அடிப்படையில் ஊதியம் நிர்ணயம் செய்ய அரசு இப்போது ஏற்பாடு செய்திருக்கிறதா? அப்படியானால் அந்த அடிப்படையில்கூட அவர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்க சில வங்கிகளில் ஏற்பாடு இல்லையே, அதற்காக உடனடி நடவடிக்கைகள் எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோல் அந்தந்த சங்கத்தினுடைய வருவாய்க்கேற்ப ஊதிய விகிதங்கள் நிர்ணயம் செய்ய பதிவாளர் பரிந்துரை செய்திருக்கிறார்கள். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 342.

திரு. கோ. இளங்கோவன் : பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தின் போது பாயின்ட் ஆப் ஆர்டர் அனுமதிப்பதில்லை.

வலையர் புனர்வாழ்வுத் திட்டம்.

* வினா எண் 342— திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் பிரமலைக்கள்ளர் புனரமைப்பு செயல்படுவதுபோல், பிற்பட்டோர் நலக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட வலையர் புனரமைப்பு செயலாக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படத் தொடங்கும் ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : (அ) & (ஆ) மதுரை மாவட்டத்தில் பிரமலைக்கள்ளர் புனரமைப்பு செயல்படுவதுபோல், பிற்பட்டோர் நலக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட வலையர் புனரமைப்புத் திட்டம் அரசால் ஏற்றுக்கொள்ளப்படாததால் செயலாக்கப்படமாட்டாது.

திரு. ஒ. சுப்பிரமணியன் : ஹில் ட்ரைப்ஸ், ஷெட்யூல்ட் காஸ்ட்ஸ் போன்றவர்களைவிட மிகவும் தாழ்ந்த நிலையில் உள்ள செட்டிநாடு வலையர்கள் மேம்பாடு அடைய விசேஷ திட்டம் ஏதாவது அரசிடம் உண்டா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : இவர்களுக்கென விசேஷத் திட்டம் எதுவும் இப்போது அரசாங்கத்திடம் இல்லை.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : மலை ஜாதியினருக்கு என்ன இலக்கணம் இருக்கிறதோ அதேபோன்று வேட்டையாடுவது அணில் பிடிப்பது, முயல் பிடிப்பது போன்ற காரியங்களை செய்து அதை வைத்து அவர்கள் பிழைப்பு நடத்துகிறார்கள். செட்டிநாடு வலையர்களுக்கு என்று விசேஷச் சலுகை இருந்தது ஏன் ரத்து செய்யப்பட்டது என்று தெரியவில்லை. அதைப்பற்றி தெரிவிப்பார்களா ?